FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165124

1. District : மாவட்டம் கரூர் PS: கா.நி.பெயர் கரூர் நக. பிரிவு Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 129/AC/2026 Date: நாள் 29.10.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.10.2026 Date to : நாள் வரை காலை சுமார் 09.35 மணி.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2026 Time : நேரம் இரவு 07.00 மணி.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.10.2026 Time : நேரம் இரவு 07.45 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மின் நடைச்சுருக்கம் செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி உதவி ஆணையர் (கிழக்கு பராமரிப்பு) நாயனூர் பிரிவு அலுவலகம், தென்கிழக்கு மின் பகிர்மான கழகம் லிட்., கரூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. with Distt. இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் – கரூர்.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சரவணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தி.ப. பழனிசாமி.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1978 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் தனியார் நிறுவன ஊழியர் மற்றும் சிவில் ஒப்பந்ததாரர் (g) Address : முகவரி த.கு. 361-அ, எஸ்.வி.பி. நகர், மதுரை புதிய பைபாஸ் ரோடு, எஸ்.எஸ்.எஸ் மஹால் அருகில், கரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தி.ந. ஸ்பரன், இயக்குமேன், உதவி பொறியாளர் (கிழக்கு பராமரிப்பு) நாயனூர் பிரிவு அலுவலகம் தென்கிழக்கு மின் பகிர்மான கழகம் லிட்., கரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
நாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

கணினியில் தமிழில் நகல் எடுத்தோன்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

29/10/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.10.2026 at 07.00hrs.

Name: பெயர் K. கோபிநாதன்
Rank: நிலை .....No. என் .....
கணினி இயக்குனர்,
மு.த.கு. பரப்பு, கரூர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.12/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு.K.சாமிநாதன் ஆகிய நான் 29.10.2026 ஆம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது P.சரவணன், த/பெ பழனிசாமி, நெ.361-2, எல்.வி.பி நகர், மதுரை புதிய பைபாஸ் ரோடு, எல்.என்.எஸ் அஞ்சல், கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் ஒன்றினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் P.சரவணன், த/பெ பழனிசாமி, நெ.361-2, எல்.வி.பி நகர், மதுரை புதிய பைபாஸ் ரோடு, எல்.என்.எஸ் அஞ்சல், கரூர். பெறுநர் காவல் ஆய்வாளர் லஞ்ச ஒழிப்பு துறை ஆபிஸ், கரூர். நான் கரூர் மாவட்டம் மதுரை புதிய பைபாஸ் ரோடு அருகில் , எல்.வி.பி நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கரூர் தொழிற்பேட்டையில் கேபிள் டிவி மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனது தாயாரின் சித்தி மகள் திருமதி.லட்சுமி என்பவர் பாகநத்தம் கிராமம் முஷ்டகிணத்துப்பட்டியில் வசித்து வருகிறார். அவரது கணவர் திரு.முருகேசன் சுமார் 20 வருடத்திற்கு முன்பு வேறு திருமணம் செய்துகொண்டு எனது சித்தியை விட்டுவிட்டு சென்றுவிட்டார். எனவே நான்தான் எனது சித்தி லட்சுமி அவர்களுக்கு அவ்வப்போது தேவையான உதவிகளை செய்து வருகிறேன். மேலும் எனது சித்தி லட்சுமி அவர்களுக்கு எழுதப்படிக்க தெரியாது. அவருக்கு கடந்த 15.07.2025 அன்று அவரது தந்தை வழி பூர்வீக சொத்தான பாகநத்தம் கிராம சர்வே.எண்.732/2A-ல் 4 ஏக்கர் விவசாய நிலம் பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது. அதில் அவர் சுமார் 16X10 சதுரஅடி அளவுள்ள சிறிய வீடு ஒன்றினை புதிதாக கட்டியுள்ளார். அவருக்கு வெளி அனுபவம் இல்லாததால் அந்த வீட்டிற்கு புதிய மின் இணைப்பை பெற்றுத்தருமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் எனது சித்தி திருமதி.லட்சுமி அவர்கள் பெயரில் 13.10.2026 அன்று சிங்கில்பேஸ் மின் இணைப்பு கேட்டு ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்ப எண்.2000602110261145 ஆகும். அதன்பிறகு 14.10.2026 ஆம் தேதி எனது சித்தி பெயரிலுள்ள பாகப்பிரிவினைப்பத்திரம், பட்டா, எப்.எம்.பி, ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து ராயனூரிலுள்ள மின்சார வாரிய உதவிப்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு சி.ஏ அவர்களின் இருக்கையிலிருந்த ஒரு அலுவலரிடம் விண்ணப்பத்தை கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு உதவிப்பொறியாளர் வந்தவுடன் அவரிடம் கொடுத்துவிடுவதாகவும், அவர் நேரில் வந்து ஆய்வு செய்தபின் கட்டணம் செலுத்த வேண்டும் என்று என்னிடம் தெரிவித்தார். அவர் சொன்னவாறு உதவிப்பொறியாளர் ஆய்வு செய்ய எனது சித்தி வீட்டிற்கு வராததால் நான் மீண்டும் 22.10.2026 ஆம் தேதி சுமார் 10 மணிக்கு

ராயனூரில் உள்ள உதவிப்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று சி.ஏ அவர்களை சந்தித்து கள ஆய்வு சம்மந்தமாக கேட்டபோது, அவர் ஒயரிங் வேலை முடிந்துவிட்டதா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே ஒயரிங் வேலை செய்து, ஒயரை கம்பத்தில் கட்டிவிட்டது பற்றி அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் டிமாண்ட் கட்டணத்தை செலுத்திய பிறகுதான் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்றும், பணத்தை செலுத்தும்படி சொன்னார். அதன்பேரில் நான் அன்றையதினமே ரூ.5,575/- தொகையை ஆன்லைன் மூலமாக மின்வாரியத்திற்கு செலுத்திவிட்டேன். அதன்பிறகும் எனது சித்தி லட்சுமி அவர்கள் கட்டிய புதிய வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை. இந்நிலையில் 28.10.2026 அன்று மாலை சுமார் 5 மணிக்கு செல்போன் எண் 9944665599-லிருந்து எனது செல்போன் எண். 9952894444 க்கு மிஸ்டுகால் வந்தது. நான் அந்த எண்ணிற்கு மீண்டும் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் ராயனூர் மின்வாரிய அலுவலகத்திலிருந்து போர்மேன் ஈஸ்வரன் பேசுவதாகவும், தற்போது முஷ்டகிணத்துப்பட்டியிலுள்ள எனது சித்தி லட்சுமி அவர்கள் கட்டிய புதிய வீட்டில் இருப்பதாக தெரிவித்தார். நான் அவரிடம் புதிய மின் இணைப்பு பற்றி கேட்டபோது, அவர் நாளை காலை சுமார் 9 மணிக்கு ராயனூரில் உள்ள அவரது அலுவலகத்திற்கு வந்து அவரை நேரில் சந்திக்குமாறு தெரிவித்தார். அதன்பேரில் நான் 29.10.2026 காலை சுமார் 9.15 மணிக்கு ராயனூரிலுள்ள உதவிப்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தில் இருந்த உதவிப்பொறியாளரிடம் எனது சித்தி லட்சுமி பெயருக்கு மின் இணைப்பு வழங்கும்படி கேட்டு ஆன்லைன் மூலம் கொடுத்த விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி கேட்டேன். அதற்கு உதவிப்பொறியாளர் என்னிடம் மின் இணைப்பு சம்மந்தமாக அலுவலக ஹாலில் இருந்த போர்மேனை காட்டி அவரை போய் பார்க்கும்படி கூறினார். அதன்பேரில் நான் உடனே போர்மேன் ஈஸ்வரன் அவர்களை பார்த்து புதிய மின் இணைப்பு பற்றி கேட்டபோது என்னை சிறிது நேரம் அலுவலகத்திற்கு வெளியே காத்திருக்குமாறு சொன்னார். அவர் சொன்னதன்பேரில் நான் அலுவலகத்தின் வெளியே காத்திருந்தேன். சுமார் 20 நிமிடம் கழித்து போர்மேன் ஈஸ்வரன் அவர்கள் என்னை அழைத்து என்னிடம் அலுவலகத்திலிருந்து மின் மீட்டரை எடுத்துவந்து வீட்டில் பொறுத்தி மின் இணைப்பு வழங்கவேண்டும் என்றால் ரூ.4000/- கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் நான் என்ன உன்னிடம் பத்தாயிரமா கேட்டேன், நாலாயிரம்தானே கேட்கிறேன் அரை மணி நேரத்திற்குள் பணம் ரூ.4000/- ஐ கொண்டுவந்து கொடுத்தால் உடனே மின் இணைப்பு வழங்குவதாகவும், பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு வரும்படி என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவரிடம் எதுவும் சொல்லாமல் வந்துவிட்டேன். எனக்கு போர்மேன் ஈஸ்வரன் அவர்களுக்கு

ரூ.4000/- லஞ்சமாக கொடுத்து சித்தி லட்சுமி அவர்களின் பெயருக்கு புதிய மின் இணைப்பு பெற விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.4,000/- லஞ்சம் கேட்ட போர்மேன் ஈஸ்வரன் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் ராயனூர் உதவிப்பொறியாளர் அலுவலகத்தில் எனது சித்தி லட்சுமி பெயரில் விண்ணப்பித்த விண்ணப்பத்தின் ஸ்டேட்டஸ், கட்டண ரசீது, வில்லங்கச்சான்று, பட்டா, எப்.எம்.பி. ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (P.சரவணன்) 29.10.2026.

Sir, Received the complaint on 29.10.2026 at about 19.00 hrs,. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.12/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 19.45 hrs on 29.10.2026. Sd/-(xxxxxxxx) 29.10.2026. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tr.P.Saravanan S/o. Palanisami, D.No.361-2, LVB Nagar, Madurai New Bye-Pass Road, LNS Post, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

29/10/26

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.